திரு. கே. எஸ். கணபதி : 4—1—1973 முதல் அவர்கள் விருப்பப்பட்டால், எடுத்துக்கொள்ளலாமென்று மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி அலுவலகத்தில் எந்த விதமான தகவலும் இல்லை. அது குறித்து அவர்கள் நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கல்வி இலாகாவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வற்புறுத்துவார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தேவையிருந்தால், அது பற்றி யோசிக்கலாம்.

Reinstatement of Doctor pending enquiry

*34 *Q.*—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether a doctor attached to the Government Hospital Musiri, Tiruchirappalli district, on whom enquiry was conducted in 1974, for certain allegations against him, was reinstated at Musiri itself, before the conclusion of the enquiry; and

(*b*) the basis on which he was reinstated as such ?

விசாரணையில் உள்ள மருத்துவ அதிகாரி மீண்டும் வேலையில் நியமனம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிரி அரசினர் மருத்துவமனையில், குற்றம் புரிந்ததாக 1974 ஆம் ஆண்டு விசாரணையில் உள்ள டாக்டர், விசாரணை முடிவதற்குள் முசிரியிலேயே மறுபடியும் வேலையில் அமர்த்தப்பட்டாரா ?

(இ) ஆமெனில், எந்த அடிப்படையில் அமர்த்தப்பட்டார் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, (அ) & (இ) குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணையில் உள்ள மருத்துவ அதிகாரி, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை இயக்குநர் அவர்களால் 26—10—1974 அன்று முசிறி அரசினர் மருத்துவ மனைக்கு மீண்டும் வேலையில் சேர்க்கப்பட்டார். ஒழுக்கக் கண்காணிப்பு பற்றிய விரிவான புலனாய்வு வெகு

நாட்களுக்குப் பின்னர் அதாவது 1975 ஜனவரித் திங்களில்தான் மேற்கொள்ளப்பட்டது. 5—3—1975 அன்று, அந்த ஒழுக்கக் கண்காணிப்பு இயக்குநர் தெரிவித்த கருத்துக்கு இணங்க, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டார்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மறுபடியும் அந்த டாக்டர் ராம கிருஷ்ணன் என்பவர் அதே மருத்துவ மனையில் 'ரிசர்வ்' போஸ்டுக்கு மாற்றப் பட்டாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 'மறுபடியும்' என்பது எப்போது என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயமாகும். விஜிலென்ஸ் துறையைச் சேர்ந்தவர்கள் அந்த டாக்டர் குற்றம் புரிந்ததாக 1975 ஜனவரியில் இலாகாவிற்குத் தெரிவித்தார்கள். 5—3—1975 ல் அந்த டாக்டர் அந்த இடத்திலிருந்து மாற்றப்பட்டார். 26—10—1974 க்கு முன்பு, அதாவது 5 மாதங்களுக்கு முன்னல் ஒரு முறை அவர் இராமநாதபுரம் மாவட்டத்தில் வேறு ஒரு இடத்திற்கு மாற்றப்பட்டார். அவர் தனக்கு சேலம் மாவட்டத்தில் பணி மாற்றம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டார். அங்கு எந்த இடமும் காலியாக இல்லாத காரணத்தாலே அங்கு 'ரிசர்வு போஸ்ட்' என்ற வகையில் அவர் பணியில் சேர்க்கப்பட்டார். 'மறுபடியும்' என்பது விசாரணைக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி.

(பிற்பகல் 4-20)

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இந்த ரிசர்வ் போஸ்டுக்கு ஒரு தாலுகா மருத்துவமனையில் எந்தத் தகுதி அடிப்படையிலே நியமிக்கிருர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ரெகுலர் போஸ்ட் என்பது அங்கேயிருந்து வேலே பார்ப்பதற்கு. ரிசர்வ் போஸ்ட் என்பது அவ்வப்போது தேவைப்படுகின்ற மருத்துவமனைகளுக்கு அனுப்புவதற்காக ஏற்பட்டது.

திரு. எல். பலராமன் : இந்த மருத்துவ அதிகாரி ஒழுக்கக்கேடான முறையில் நடந்து கொண்டாரென்று சொன்னுர்கள். என்ன ஒழுக்கக்கேடாக நடந்துகொண்டார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதுதான் விஜிலன்ஸ் துறைக்கு உள்ள சிறப்பு. யார்மீது என்ன குற்றம் என்பது அமைச்சருக்குக் கூடத் தெரியாது. அந்தத் துறையில் உள்ளவர்கள் விசாரணை செய்து முடிவெடுக்கும் நிலேயில் நமக்கு அனுப்புவார்கள். அப்போதும் என்ன குற்றம் செய்தார் என்பதை

எழுதமாட்டார்கள். 'இன்ன குற்றம் செய்த காரணத்திற்காக இவர்மீது இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுகிறது' என்றுதான் எழுதுவார்கள். சில நேரங்களில் அவர்களே நடவடிக்கை எடுத்து விடுகிறார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: ஊழல் குற்ற விசாரணை முடிவடைந்துள்ளதா? அதுபற்றிய விவரம் அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: விஜிலன்ஸ் துறையினுடைய புலன் விசாரணை விவரத்தை அண்மைக்காலத்திலே தெரிவித்திருக்கலாம். அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

Strikes by Doctors in Government Hospitals.

*35 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether there have been strikes by Doctors in the Government Hospitals of the State;

(*b*) if so, the details thereof;

(*c*) the manner and extent to which the public were affected; and

(*d*) the steps contemplated by the Government to prevent recurrence of such strikes?

அரசாங்க மருத்துவ மனைகளில் மருத்துவர்களின் வேலை நிறுத்தம்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளனரா?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை?

(உ) பொதுமக்கள் எந்த முறையில், எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டனர்?

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS